(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையினை அளிக்க விரும்புகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் தாலுகாவிலுள்ள விசுவநாதபுரம் கிராமத்தில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க 174.47 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 26-2-2008 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்தப் பூங்காவில் தற்போது உள்கட்டமைப்புப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு ரூ.22 கோடி செய்யப்பட்டு, சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 50,000 சதுர அடியில் தகவல் தொழில்நுட்ப மற்றும் நிர்வாகக் கட்டடத்தின் கட்டுமானப் பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் வெளியிடப்பட்டு பணிகள் டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் 10 மாதங்களில் இப்பணிகள் முடிவடைந்து பூங்கா பயன்பாட்டிற்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

19—

மீன்பிடித் துறைமுகம்

***106184—திரு. டி. மூர்த்தி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 11]

(அ) திருப்போரூர் தொகுதி, கோவளத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் சட்டப் பேரவைத் தொகுதி, கோவளத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகில் உள்ள எனது திருப்போரூர் தொகுதியில் கோவளம் பகுதியில் அதிக அளவில் வஞ்சிரம், இறால், சுறா, வாளை, நெத்திலி, கொடுவா, பாறை, தேங்காய்பாறை, வெளவால், நண்டு போன்ற மீன்கள் கிடைக்கின்றன. இப்பகுதியில் அதிக அளவில் மீன்கள் கிடைக்கின்ற காரணத்தினால் இந்தப் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஓர் இடத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்குமுன் விரிவான தொழில்நுட்ப ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டு, அவ்வாய்வறிக்கையின் அடிப்படையில் பெங்களூருவில் உள்ள மீன் துறைக்கான மத்திய கடல் பொறியியல் மையத்தின்மூலம் தொழில்நுட்பப் பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு, மத்திய, மாநில அரசுகளிடமிருந்து நிதி பெறப்பட்டு, திட்டம் நிறைவேற்றப்படும். மேலும், மீன்பிடி விசைப் படகுகள் அதிக அளவில் தங்கி, மீன்பிடித் தொழில்புரியும் பகுதியில்தான் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும். தமிழகத்தில் மீன்பிடித் துறைமுகம், மீன் இறங்குதளம் அமைக்க தகுதியுள்ள இடங்கள் குறித்து கடந்த 1998 ஆம் ஆண்டு பெங்களூருவில் C.I.C.E.F. நிறுவனத்தால் தமிழகக் கடலோரப் பகுதிகளில் ஆய்வு

நடத்தி அந்த ஆய்வின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெருந்திட்ட அறிக்கையில் கோவளத்தில் மீன்பிடித் துறைமுகம், மீன் இறங்குதளம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளதாகக் குறிப்பிடவில்லை.

முற்பகல் 10-45

மேலும், திருப்போரூர் தொகுதி, கோவளம் மீனவ கிராமத்தில் சுமார் 250 கட்டுமரங்கள் மற்றும் F.R.B. படகுகள் மட்டுமே மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. இங்கே மீன்பிடி விசைப்படகுகள் ஏதும் தங்கி மீன்பிடிப்புத் தொழிலில் ஈடுபடுவதில்லை. எனவே, காஞ்சிபுரம் மாவட்டம், கோவளம் மீன்பிடி கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளாக நமது அரசு, எத்தனை இடங்களில் மீன்பிடித் துறைமுகம் அமைத்துள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்கும்படியும், அதேபோன்று நமது தமிழகத்தில் உள்ள ஆறு, ஏரி, குளம், குட்டை போன்ற நீர் நிலைகளில் அழிந்து வரும் நாட்டு மீன்களான குரவை, விரால் கெளுத்தி, கெண்டை, ஜிலேபி, அயிரை மீன், ஆறா, விலாங்கு, நெய்கெண்டை, உளுவை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மூர்த்தி, வினா, மீன்பிடித் துறைமுகம் பற்றியது, மீன்களில் எத்தனை வகையானவை இருக்கின்றன என்று ஏன் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்? மீன்பிடித் துறைமுகம் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. டி. மூர்த்தி: பழைய காலத்து மீன்கள், நம்முடைய தமிழர்கள் விரும்பிச் சாப்பிடுகிற மீன்கள். இவற்றை எல்லாம் மறந்துவிட்டிருப்பார்கள் என்பதால், மறுபடியும் அவைக்குத் தெரிவிக்கிறேன். நெய்கெண்டை, உளுவை, நண்டு, நத்தை போன்ற அதிக ருசியான நாட்டு மீன்கள் அழிந்து வருகின்றன. எனவே, அழிந்து வரும் நாட்டு மீன்களை இனப் பெருக்கம் செய்வதற்கு அரசு திட்டம் ஏதேனும் வைத்துள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2011 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள் 5-ஆவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழகத்தில் இதுவரையில் மீனவ மக்களுக்கு எந்த ஆட்சிக் காலத்திலும் செய்யப்படாத பல நல்ல காரியங்களை மீனவர்களுடைய வாழ்வின் முன்னேற்றத்திற்காகச் செய்து வருகின்றார்கள். குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழகத்தில் நம்முடைய வரலாற்று முதல்வர் ஐயா கலைஞருடைய ஆட்சியில், கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் துறைமுகத்தில் ரூபாய் 27 கோடியே 10 இலட்சம் செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கின்ற பணி வேகமாக நடைபெற்று வருகிறது.

அதேபோல, கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டணத்தில், ரூ.40 கோடி செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கின்ற பணி விரைவாக நடைபெற்று வருகிறது. அதேபோல, Boot system-ல் முட்டம் மீன்பிடித் துறைமுகம், ரூ.42 கோடி செலவில் அமைக்கின்ற பணி நடைபெற்று வருகிறது. அதேபோல, கன்னியாகுமரி மாவட்டத்தில் ராஜாக்கமங்கலம்துறையில், ரூ.36 கோடியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பழையாறு, மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணிகளுக்காக டெண்டர் விடப்பட்டு இன்னும் சில நாட்களுக்குள் அந்தப் பணிகள் தொடங்கப்பட உள்ளன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

பால் குளிரூட்டும் நிலையம்

*117008—திரு. ஓ.கே. சின்னராஜ்:

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—